# மின்நிலா

ஆகஸ்ட் 17, 2020



engalblog.blogspot.com

## எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் …

## இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் …

engalblog@gmail.com

## என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். நன்றி.

**Cover photo by : KGG**

============

## பதிவுகளுக்கு இடையே உள்ள படங்கள் :

**See the names in the photo.**

## ஆசிரியர்கள் :

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**

## மின்நிலா 012 (முந்தைய இதழ் சுட்டி)

**தலைப்பு ………….. பக்கம் எண்**

ப்ரெட் லோஃப் - நெல்லைத்தமிழன் ரெஸிப்பி……………………………………2
சங்கிலி (சிறுகதை) -- ஜீவி………………………………………………………………7
எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள் ……………………………………12
கேள்வி - பதில்கள்………………………………………………………………14
யார் நீ? ஸ்ரீராம்………………………………………………………………19
பலசரக்கு :: ஸ்ரீராம்………………………………………………………………23
சிந்தனை ரமா ஸ்ரீநிவாசன்………………………………………………………28
எல் டொரடோ ல - எல்லாமே தங்கம் ! KGG……………………………………29
மின்நிலா 012 பற்றி வாசகர் கருத்து………………………………………………30
ஒளியும் ஒலியும் + விவரங்களும் : ஸ்ரீராம்……………………………………31
நாடி ஜோதிடம் ( ஒன்று ) வல்லிசிம்ஹன்………………………………………36
B POSITIVE by SRIRAM………………………………………………………………38
அதிர்ச்சி … ஆனால் உண்மை ரமா ஸ்ரீநிவாசன்……………………………………40
பேசும் படங்கள் :: kayjees……………………………………………………………44

(குறிப்பு : மேலே நீல நிறத்தில் காட்டப்பட்டுள்ள பதிவுகள் மின்நிலாவில் மட்டுமே வெளியிடப்படுபவை. மற்றவை எங்கள் ப்ளாக் வலைப்பூவில் சென்ற வாரம் வெளியானவை. )

# ப்ரெட் லோஃப் - நெல்லைத்தமிழன் ரெஸிப்பி

நிறைய செய்முறைகள் என் பெண் பண்ணினா. அதையெல்லாம் படங்கள் எடுத்து வச்சிருக்கேன். அவள்ட இதை எ.பிக்கு அனுப்பப் போகிறேன் என்றேன். ஆனால் ஒன்றையும் இதுவரை எ.பிக்காக எழுதவே இல்லை. ஒவ்வொரு தடவையும், இதையே முதல் செய்முறையா எழுதிவிடுகிறேன் என்பேன்.

தொடர்ந்து எனக்கு எடை அதிகமாகிக்கொண்டே இருந்ததால், இன்று ஜி.எம். டயட் ஆரம்பிக்கணும் என்று நினைத்து காலயிலிருந்து ஆரம்பித்தேன். மதியம் 2 மணி வரை ஒழுங்காகப் போயிட்டிருந்தது.

அப்போதான் கிச்சனிலிருந்து எண்ணெயில் பொரிக்கும் வாசனை வந்தது. இது என்னடா இந்த நெல்லைக்கு வந்த சோதனை என்று போய்ப்பார்த்தால், என் மனைவி பால் போளி செய்துகொண்டிருந்தாள். கர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர். நான் ஜி.எம். டயட் ஆரம்பித்த அன்றுதானா பால்போளி செய்யணும்? நாளைக்குக்கூட ஜி.எம். டயட் ஆரம்பிக்கலாம். ஆனால் நாளை பால்போளி செய்வாளா என்று என் மனது என்னைக் கேட்டது. அவ்ளோதான்.. பண்ணின பால் போளில ஐந்தை எடுத்து ஒரு தட்டில் போட்டுக்கொண்டு சாப்பிட்டுவிட்டேன்..

அப்போதான் என் பெண், அவனில் தான் வைத்திருந்த ப்ரெட் லோஃபைக் காண்பித்தாள். நான் எல்லோரையும் என்கரேஜ் பண்ணுவதில் ரொம்ப எக்ஸ்பர்ட் (ஹா ஹா) என்பதால், அவளிடம், ப்ரெட்டை எதுக்கு கஷ்டப்பட்டு பண்ணற.. பேசாமல் இரண்டு ப்ரெட்டுக்கு 70 ரூபாய் கொடுத்தால் கடைக்காரன் கதறிக்கொண்டு நம்மிடம் பிரெட்டைக் கொடுப்பான் என்றேன். அவள் ஒன்றும் சொல்லவில்லை.

கொஞ்ச நேரத்தில் அவனிலிருந்து எடுத்து ஒரு தட்டில் வைத்துவிட்டு என்னைக் கூப்பிட்டாள். பார்க்க அவ்வளவு அழகாக இருந்தது. கட் பண்ணி ஒரு ஸ்லைஸ் தந்தாள். கட் பண்ணும்போதே எனக்கு நல்ல குவாலிட்டில ப்ரெட் வந்திருக்கு என்று தெரிந்துவிட்டது.

அவ்வளவு சுவையாக மெத் மெத் என்று இருந்தது. படங்கள் ஏதேனும் எடுத்திருக்கிறாயா என்றேன். கொஞ்சம் எடுத்திருக்கிறேன் என்றாள். (ஆனா நான் ஒழுங்கா அவள் செய்யும் ஒவ்வொன்றையும் இந்த மாதிரி எழுதியிருந்தேன் என்றால் எல்லா ஸ்டெப்ஸுக்கும் படங்கள் எடுத்திருப்பாள்). அவள் செய்த ப்ரெட்டில் நான் ரொம்பவே இம்ப்ரெஸ்

ஆகிவிட்டேன். சரி.. இப்போவே எ.பிக்கு செய்முறை எழுதிவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு உடனே எழுத ஆரம்பித்தேன்.

தேவையானவை:

5 அல்லது 5 1/2 கப் மைதா மாவு.

1 1/2 தேக்கரண்டி உப்பு

1/3 கப் ஜீனி

2 கப் தண்ணீர்

4 மேசைக்கரண்டி எண்ணெய்

1 1/4 மேசைக்கரண்டி Instant Yeast

செய்முறை:

1. தண்ணீரை கொஞ்சம் சூடாக்கி (above warm) அதில் ஜீனியைச் சேர்க்கவும். ஓரளவு கரைந்துவிடும். இப்போ தண்ணீர் வெதுவெதுப்பாக இருக்கும். அப்படீன்னா விரலை ஒரு நிமிடம் தண்ணீரில் வைத்துக்கொண்டிருந்தாலும் சூடு பொறுக்கும்படி இருக்கணும் (சூடா இருக்காது. சூடான தண்ணீரில் ஈஸ்ட் சேர்த்தால் அது வேலைக்காகாது).

2. அதில் ஈஸ்ட் சேர்த்து கலக்கணும். ஒரு நிமிடத்தில் லைட்டாக நுரை நுரையாக வரும்.

3. மைதா மாவும் உப்பு சேர்ந்த கலவையில், 4 மேசைக்கரண்டி எண்ணெய் சேர்த்து, அதனுடன் இந்த ஈஸ்ட் சேர்த்த தண்ணீரைச் சேர்த்துக் கலக்கவும்.

4. முதல்ல கொஞ்சம் ஒட்டுவது போல இருக்கும். 15 நிமிடம் நல்லா கலக்கினால் சப்பாத்தி மாவை விட சாஃப்டா வரும்.

5. ஒரு பாத்திரத்தில் சிறிது எண்ணெய் தடவி, மாவை வைத்துவிட்டு, பாத்திரத்தின் மேல் ஈரத் துணியோ அல்லது க்ளிங் ஃபில்மோ போட்டு 20-25 நிமிடங்கள் வைத்துவிடவும்.

6. பிறகு அந்தப் பாத்திரத்தைப் பார்த்தால், மாவு உப்பி கிட்டத்தட்ட இரண்டு மடங்கு பெரிதாகியிருக்கும்.

7. அதை திரும்பவும் பிசைந்தால் முன்பு இருந்த அளவுக்கு வந்துவிடும்.

8. இதனை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளவும்.

9. ஒரு பகுதியை, செவ்வகம் மாதிரி பரத்தி, அதன் ஒரு நீள் பகுதியை மடித்து, இரண்டாவது நீள் பகுதியை அதன் மேல் வைக்கவும்.

அதாவது மூன்றில் ஒரு பகுதி கீழேவும், அதன் மேல் வலதுபக்கத்திலிருந்து வந்த பகுதியும் அதன் மீது இடது பக்கத்திலிருந்து வந்த பகுதியையும் வைக்கவும். இப்போ மீண்டும் செவ்வக வடிவத்தில் இருக்கும். வலது புற ஓரத்தை மெதுவாக அழுத்திவிடவும் (பிரியாமல் இருக்க). பிறகு இதனை கீழ்ப்பகுதி மேல் புறமாக வருமாறு பாத்திரத்தின் ஒரு பகுதில் வைக்கவும். (அதாவது ஸ்மூத் பகுதி மேல் புறமும், ஒட்டிய பகுதி கீழ்ப்புறமும் இருக்கும்). இதேபோல இன்னொரு பகுதியையும் செய்யவும். Actually நாம இரண்டு ப்ரெட் லோஃப் தயார் செய்கிறோம். இரண்டையும் வைத்த பிறகு,அந்தப் பாத்திரத்தை துணி அல்லது க்ளிங் ஃபிலிம் போட்டு மூடிவிடவும்.

10. சுமார் நாற்பது நிமிடங்கள் கழித்து இரண்டும் பெரிதாகும்.

11. பிறகு அதை அவனில் வைக்கவும். இப்போது அதன் மீது என்ன டாப்பிங் வேண்டுமோ அதனைச் சேர்த்துக்கொள்ளலாம். என் பெண், ஒன்றை நார்மலாகவும், இன்னொன்றின் மீது வெள்ளை எள்ளைத் தூவியும் வைத்தாள்.

12. நாற்பது அல்லது ஐம்பது நிமிடங்கள் அது bake ஆகணும்.

நல்லா bake ஆகிவிட்டால் ப்ரெட் லோஃப் ரெடி.



















ப்ரெட் லோஃப்லாம் கடைகள்லயே வாங்கிடலாம். நல்ல ப்ராண்டட் கடைகளாக இருந்தால் (இந்த ஊர்ல இருக்கும் கேக் வாலா என்பது போன்ற) லோஃப் செய்வதற்கு உபயோகிக்கும் பொருட்கள் தரமானதாக

இருக்கும். நான் ஒரு தடவை லால்பாக் (Lalbaugh) பூங்காவில் நடைப்பயிற்சி போயிருந்தபோது அதற்கு எதிரே ஒரு பேக்கரி வேன் வந்து எல்லாப் பொருட்களையும் விற்றுக்கொண்டிருந்தார்கள் (properஆ pack செய்தது). ஊரடங்கு சமயத்தில் நல்ல சாண்ட்விச் ப்ரெட் கிடைக்காததால், அங்கு இந்த வேனைப் பார்த்ததும் பெரிய முக்கோண வடிவில் இருந்த சாண்ட்விச் ப்ரெட் 60 ரூபாய்க்கு வாங்கினேன்.

பசங்க அதை வைத்து சாண்ட்விச்லாம் பண்ணிச் சாப்பிட்டாங்க. இன்னொரு சமயத்தில் பெங்களூர் ஐயங்கார் பேக்கரியில் அதே போன்ற சாண்ட்விச் ப்ரெட் (லோஃப்) வாங்கினேன். ஆனா அதில் ஏதோ ஸ்மெல் வருதுன்னு பசங்க சொன்னாங்க. அவ்வளவா விரும்பலை. அதுனால ingredients qualityயா இல்லைனா நல்லா இருக்காது. வீட்டில் ப்ரெட் செய்யும்போது எல்லாமே நல்ல பொருட்களைச் சேர்ப்பதாலும் சுத்தமாக இருப்பதாலும், ப்ரெட் சூப்பராக இருக்கும்.

வாய்ப்பு கிடைத்தால் செய்துபாருங்கள்.




>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

# சங்கிலி (சிறுகதை) -- ஜீவி



அறிவுடைநம்பி ரொம்பவும் சுவாரஸ்யமான மனுஷன். எங்கள் தெருக்கோடியில் 'ஆட்டோமொபைல் வொர்க் ஷாப்' வைத்திருக்கிறான். என்னிடம் ஒரு 'இரண்டாம் கை' மொபெட் இருக்கிறது. அதற்கு அடிக்கடி வரும் 'நோவு'க்கெல்லாம் கைகண்ட மருந்து தரும் வைத்தியன் அறிவுடைநம்பி தான்.

முதல்முறை என் வண்டியை அவனிடம் ரிப்பேருக்குக் கொண்டு போனபோது, "ஸ்டார்ட் ஆகலேப்பா.." என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லி வைத்தேன்.

"ஸ்பார்க் ப்ளக் க்ளீன் பண்ணீங்களா?.." என்று கேட்டுவிட்டுக் கீழே குனிந்தான்.

"எல்லாம் பண்ணியாச்சு.. எதுக்கும் நீயே பாரேன்.." என்று சொல்லி வைத்தேன்.

அதற்குள் அறிவுடைநம்பி, வண்டியைத் தனது 'கேர் ஆ:ப்'பில் எடுத்துக்கொண்டு விட்டான். இரண்டே ஆயுதங்கள்.. ப்ளக்கைக் கழற்றி உள்ளே பார்த்தான். "என்ன சார், நீங்க... க்ளீன் ப்ண்ணினதா சொன்னீங்க.. எப்படி கரி அடைச்சிருக்கு பாத்தீங்களா?.." என்று அந்த இரும்பு சமாச்சாரத்தை, என் மூக்குக்கு நேரே நீட்டினான்.

நான் பதிலே பேசவில்லை.

நம்பி செய்வதையே பார்த்துக் கொண்டிருந்தேன். உப்புக்காகிதத்தை எடுத்து, பிளக்குக்குள் 'மறமற'வென்று தேய்ப்பு. கறுமை துடைத்த பளபளப்பு தெரிந்ததும், ப்ளக்கைப்
பழைய இடத்தில் பொருத்தி, ஒரே ஒரு மிதியில் ஸ்டார்ட் பண்ணி விட்டான்.

என் முகத்தில் பரம திருப்தி. பாவி.. எத்தனை உதை உதைத்திருப்பேன்?.. கிளம்புவேனா என்று சத்தியாகிரகம் பண்ணியதே?..

பர்ஸை வெளியே எடுத்து, "எவ்வளவு தரட்டும்?.." என்றேன், நன்றியோடு.

"வாணாம் சார்..." என்று மறுத்துவிட்டான் நம்பி. "இதெல்லாம் சிம்பிள் வொர்க் சார்.. நீங்களே செஞ்சிருக்கலாம்.." என்று 'அட்வைஸ்' செய்தவன்,"பெரிய வொர்க்கா கொடுங்க,சார்! சந்தோஷத்தோடு க்ளீனா செஞ்சு தந்து,துட்டு வாங்கிக்கறேன்.." என்று பெரிய மனுஷத்தனமாகச் சொன்னான்.
----

ஒரே மாதத்தில் அவன் 'யாசித்த' அந்தப் பெரிய வொர்க்--வியாதி--வண்டிக்கு வந்துவிட்டது. சாலை மேட்டுப்பகுதிகளைக் கண்டால், ஜட்கா வண்டி மாதிரி மக்கர் செய்தது. அங்குலம் அங்குலமாக அதை அவ்வப்போது மேடு ஏற்றுவதற்குள் உன்பாடு என்பாடு என்றாகி விட, அறிவுடைநம்பியிடம் தஞ்சம் புகுந்தேன்.

பக்கத்தில் கிடந்த முக்காலியில் என்னை உட்காரச்சொல்லி விட்டு, மளமளவென்று வேலையைத் தொடங்கினான் நம்பி, நடுநடுவே என்னோடு பேச்சுக் கொடுத்தபடி.

"வண்டி வாங்கி எவ்வளவு காலம் சார் இருக்கும்?" என்று கேட்டான்.

"எங்கிட்டே வந்து ரெண்டு வருஷமாச்சு.. என்கிட்டே வித்தவங்ககிட்டே ஒன்னரை வருஷமோ, ரெண்டு வருஷமோ ஓடினதா சொன்ன ஞாபகம்..."

"அதானே பார்த்தேன்.." என்று யோசனையுடன் இழுத்தான் நம்பி. "வண்டி இன்ஜின் பின் அடிவாங்கியிருக்கு.. உள்ளே பார்ட்ஸ் எல்லாம் நொறுங்கிடுச்சு..இப்போ செலவு செய்யலேன்னா, இன்னும் மோசமா இன்ஜின் அடிவாங்கிடும்.."

இன்ஜின் வாங்குமோ வாங்காதோ, நான் பட்ட அடி மிகப்பெரிசு! ஆயிரம் ரூபாய்க்கு மேல், ஸ்பேர்பார்ட்ஸே ஆகிவிட்டது! இதுக்கு மேலே நம்பிக்கு

லேபர் சார்ஜ். நூற்று எண்பது கேட்டான்."அது என்ன நூற்றெண்பது?... இருநூறாகவே வாங்கிக்கோ!" என்று நம்பிக்கு இருபது போட்டுக் கொடுத்தேன்.

"ரொம்ப தாங்க்ஸ் சார்.."என்று சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்ட நம்பி,"எது ஒண்ணுன்னாலும் சொல்லுங்க சார்.. பிரமாதமா சரி பண்ணிக் கொடுத்திடறேன்.."என்றான். கூடவே, "இது மாதிரி வண்டிங்களே இப்படித்தான் சார்! செலவு வெச்சுக்கிட்டே இருக்கும்.. ஆமா.." என்று தன் தொழில் ஞானத்தையும் வெளியிட்டான்.

என்னிடம் துட்டு வாங்கிய ராசியோ என்னவோ, ரெண்டு நாட்களாக நம்பி கடையைத் திறக்கவில்லை.

மூன்றாம் நாள், தூரத்தில் என்னைப் பார்த்ததுமே கடைவாசலில் அமர்ந்திருந்தவன் எழுந்து வந்தான்.

வண்டியை நிறுத்தி,"என்னப்பா,ரெண்டு நாளா கடை தொறக்கலையா?..மூடிக் கெடந்ததே?.." என்றேன்.

"ஆமா சார்.. ஒடம்புக்கு சொகமில்லே..."என்று துக்கத்துடன் சொன்னான். ஆளும் அரை ஆளாக மாறியிருந்தான். அவனைப் பார்க்கவே எனக்குப் பாவமாக இருந்தது.

"என்ன ஜுரமா...?" என்றேன்.

"இல்லே சார்! உங்க வண்டியைச் சரிபண்ணிக் கொடுத்திட்டு அன்னிக்கு வீட்டுக்குப் போனேனுங்களா.. இடுப்புப் பக்கம் ஏதோ வலிக்கற மாதிரி இருந்தது. கவுந்து படுத்துக்கிட்டு, சம்சாரத்தை மிதிக்கச் சொன்னேன்.. ரெண்டு மிதி மிதிச்சிருக்க மாட்டா.. அவ்வளாவுதான் சார்.. அப்போலேர்ந்து இடுப்பிலே பயங்கர வலி சார்.. விட்டுவிட்டு வருது.. உயிரே போகிற மாதிரி.." என்றான்..

"டாக்டர் கிட்டே காட்டினியா..?"

"காட்டினேன் சார்..."என்று அவன் கடைக்குப் பக்கத்திலிருக்கும் க்ளினிக்கைக் காட்டினான். மாலை நேரத்தில் மட்டுமே விஜயம் செய்யும் அரசு மருத்துவர்.

"என்ன சொன்னார்..?"

"ஊசி போட்டார் சார்.. மாத்திரை எழுதிக் கொடுத்தார்.. மருந்தே ஐநூறுக்கு மேலாயிடுச்சி.. "

"வலி வாங்கிடுச்சா?.."

"இல்லையே.. ஸ்கேன் பாத்துட்டு வரச்சொன்னார்.."

"ஸ்கேன் எடுத்துக்கிட்டியா?.."

"இந்த டாக்டரோட தம்பி தான் அண்ணா அரங்கம் பக்கத்திலே லேப் வெச்சிருக்காராம்... அங்கேயே போய் எடுத்திட்டு வரச்சொல்லி சீட்டு கொடுத்தாரு.. எடுத்திட்டேன்.. அதுக்கு அறுநூறு ஆச்சு! ஏதோ வயத்துலே உப்புக்கட்டி இருக்குதுங்களாம்... கரைக்கணுமாம்.. அதுக்கும் மருந்து கொடுத்திருக்கார்.. தினமும் ஊசி வேறே.. டெய்லி டாக்டருக்கு நூறு ரூபா சார்.. வலி குறையற மாதிரி காட்டிட்டு, திருப்பியும் கபால்னு வந்துடுது!..."

"டாக்டர் கொடுத்த மருந்து சீட்டு இருக்கா?.." என்று கேட்டேன்.

அவன் தந்த பிரிஸ்கிரிப்ஷனை வாங்கிப் பார்த்ததும் எனக்கு 'ஐயோ' வென்றிருந்தது.. நான் டாக்டருக்குப் படிக்கவில்லையே தவிர, அநாவசியமான பல மருந்துகளை மளிகைக்கடை லிஸ்ட் மாதிரி டாக்டர் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்பது மட்டும் 'பளிச்'சென்று புரிந்தது.

"சரியான டாக்டரைப் பிடிச்சேப்பா.." என்று அலுத்துக் கொண்டு,'அதெல்லாம் போகட்டும்.. ரெண்டு வாரத்துக்கு முன்னாடி இந்த டாக்டரோட டுவீலரை, நீ ரிப்பேர் பார்த்தே இல்லியா?.." என்று சந்தேகத்தோடு கேட்டேன்.

"ஆமா சார்.. படுபேஜாரான வேலை சார், அது!... ஸ்பீடாமீட்டர்லேந்து சைலன்ஸர் வரை மாத்திக் கொடுத்தேன்.. டாக்டரே அசந்திட்டார். பிரமாதம்ப்பா...வண்டி இப்போ அருமையா போறது'னு என் தொழில் திறமையைப் பாராட்டினார் சார்!" என்றான் நம்பி.

"டாக்டருக்கு அவரோட வண்டி ரொம்ப செலவு வெச்சிடுச்சோ?.."

"பின்னே.. ஏழாயிரத்துக்கு மேலே எகிறிடிச்சே.."

"ஒகோ.. அதான் விஷயம்.. ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கிப்போட்டது போக ஒன்னோட லேபர் சார்ஜ் வேறே.." என்று இழுத்தேன்..

**"எனக்கு ஆயிரம்.." என்று கூசாமல் சொன்னான் நம்பி.**


**"சரிதான்.." என்றேன்.**

**தனது தொழில் திறமையைக் காட்டி டாக்டரிடம் நம்பி பணம் பிடுங்க, டாக்டர் தனது தொழில் திறமையை நம்பியிடம் காட்டிவிட்டார்.**

**நமது அநியாயமான இழப்புகளுக்கும் அல்லது வரவுகளுக்கும் ஏதோ சங்கிலித் தொடர்பு இருக்கிறதோ?...**

**'நான் யாரிடம் அநியாயமாகப் பெற்றேன், நம்பியிடம் இழக்க...'என்று இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறேன்.**

===




>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

# எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ
UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ




LINK :

INDIA : https://www.amazon.in/dp/B08CXBPPYN

US : https://www.amazon.com/dp/B08CXBPPYN

UK :https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN

>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

# கேள்வி - பதில்கள்

**ஏஞ்சல்** :

1, **கலைஞன் என்பவன் (ர் ) யார்** ?

# கலைஞன் என்பவன் கலையை சிறப்பாக வெளிக் கொணர்பவன். அது தவிர வேறு நோக்கம் இல்லாதவன் .
கலைஞர் என்றால் மு. க.

& மக்களுக்கு மனமகிழ்ச்சி தருவதற்கு வேலை செய்து ஊதியம் பெறுபவர்.

2, **இறைசக்தி எப்படிப்பட்ட கலைஞர்களுக்குள் வரும்** ?

# எல்லா நல்லதுமே இறைசக்தியால் தூண்டப்படுவதால் உண்டாவதாகக் கருதப்படுகிறது. நல்லன அல்லாதன மனிதரின் பேராசை முதலான உணர்வுகளால் ஏற்படுவன.

& அர்ப்பணிப்போடு எந்த வேலையையும் முனைந்து செய்யும் கலைஞர்களுக்குள்.

3, **நின்டென்டோ** switch **இந்தியாவில் வந்திருக்கா** ? **விளையாடி இருக்கீங்களா** ?

# நின்டெண்டோ என்றால் என்ன என்றே தெரியாது.

& இந்தியாவில் இருக்கு. சரி – ’நி சுவி’ ஒன்றை அமேசான் மூலம் வாங்கிவிடலாம் என்று ஆர்டர் செய்ய நினைத்து தேடிக் கண்டுபிடித்தேன்.




ஆ! அம்மா !! ஆவ் !!! இருபத்து மூன்றாயிரத்து ஐநூறு ரூபாய் !!!! என்னங்க – நான் என்ன கையில ஒரு கோடி ரூபாய் வெச்சுகிட்டு, எப்படி செலவு

செய்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கேனா ! என்னைப் பார்த்து ஏனுங்கோ இப்பிடி கேட்டீங்கோ?

இது ஒருபுறமிருக்க – சுமார் இருபத்து ஐந்து வருடங்களுக்கு முன்பு பையன், பெண் இருவரும் விளையாடுவதற்கு Play Station and accessories வாங்கி, Mario, Super Mario போன்ற இருநூற்று ஐம்பது வகை விளையாட்டுகளை அவர்களோடு சேர்ந்து நானும் ஆடியது உண்டு. அப்போ எல்லாமே சேர்ந்து ஐநூறு ரூபாய்க்குள் கிடைத்தது.

4, நமக்கு பிடிச்சவங்க நல்லவர்களாகவும் பிடிக்காதவங்க கெட்டவர்களாகவும் இருக்கிறார்களே இது எப்படி ?

# அப்படியா ?

எனக்குப் பிடிக்காத சில நல்லவர்களும், பிடித்த பல ″கெட்ட″வர்களும் உண்டு.

நல்லவர் கெட்டவர் என்பதற்கான விதிமுறைகள் அவரவரளவில் மாறுபடும். நற்றாமரைக் கயம்.

& யோசிக்க வேண்டிய விஷயம்! ஒருவேளை நல்லவர்களை மட்டும்தான் நமக்குப் பிடிக்கிறது; கெட்டவர்களை பிடிப்பதில்லை என்பது காரணமாக இருக்குமோ.
ஆனால், அதே சமயம் நல்லவனைப்போல் வேடமிடும் கெட்டவனை நமக்குப் பிடித்துப்போய் விடுமோ என்கிற சந்தேகம் வருகின்ற வாய்ப்பும் அதிகம் உள்ளதால், கெட்டவனைப் போல வேடமிடும் நல்லவன் இருக்க சாத்தியங்கள் குறைவு என்று தோன்றினாலும் ஆனால் அவர்களை கெட்டவர்கள் என்று தவறாக நினைத்து நம்முடைய பிடிக்காதவர்கள் பட்டியலில் சேர்த்துவிடுவோமோ என்னும் பயமும் எழும் அதே நேரத்தில், நாம் நல்லவராக இருந்து, எதிராளியும் நல்லவராக இருந்துவிட்டால் பிரச்னை இல்லை என்று கொண்டாலும் அதே நேரத்தில் நாம் கெட்டவராக இருந்து எதிராளி நல்லவராகவோ, கெட்டவராகவோ அல்லது ந போல் வேடமிடும் கெ ......... (ஆ எங்கே கேள்வி கேட்டவரைக் காணோம்!)

கீதா சாம்பசிவம் :

மாமியார்-மருமகள் விரோதம் தமிழ்நாட்டில் மட்டும் தான் அதிகமோ? மற்ற மாநிலங்கள்/நாடுகளில் இருந்தாலும் பெரும்பாலும் அங்கெல்லாம் மாமியார்-மருமகன் பிரச்னையே அதிகம்னு தோணுது. நீங்க என்ன சொல்றீங்க?

# TV சீரியல் ரொம்ப பாக்காதீங்கன்னுதான் சொல்றேன்.

& மாமியார் மருமகள் கொடுமை, வரதட்சனைக் கொடுமை என்றெல்லாம் சில சமாச்சாரங்கள் எனக்கு இந்திப்படங்களில் / இந்தி சீரியல்களின் தமிழாக்கங்களைப் பார்த்துதான் தெரியவந்தது.

அயல் நாடுகளில் சித்தரிக்கப்படும் பல மாமியார் – மருமகன் பிரச்னைகள் ஜோக் என்ற கண்ணோட்டத்தில்தான் என்று நினைக்கிறேன்.

நெல்லைத்தமிழன் :

என் பெரியப்பா, தான் இறக்கப் போவதைத் தெரிந்து ஒரு வாரம் முன்பு என் அப்பாவை வரச் சொன்னார் (திருவனந்தபுரத்துக்கு). என் பாட்டிக்கும் இறப்பிற்கு முந்தின நாள் இறப்பு சம்பந்தமாகக் கேள்விகள் கேட்டிருக்கிறார். இது மாதிரி நீங்கள் கேள்விப்பட்டிருக்கீங்களா?

# இந்த மாதிரி அசாதாரண சம்பவங்கள் எல்லாக் குடும்பத்திலும் இருக்கும். என் உறவினர் ஒருவர் தன் அந்திம காலம் நெருங்கி விட்டதாகக் கருதி சில ஏற்பாடுகள் செய்து அதன் பின் பத்து ஆண்டுகள் இருந்தார்.
பலித்தபின்பு "அப்பவே சொன்னார்" என மாய்ந்து போவோம். பலிக்காத விஷயங்களில் திரில் இல்லாததால் எளிதாக மறக்கப்பட்டு விடுகின்றன.

வாழ்க்கை வாழ்வதற்கேனு சொல்றாங்களே. வாழ்வதுன்னா என்ன?

# ரசனையுடன், மகிழ்ச்சியாக, யாரையும் புண்படுத்தாமல் , பிறருக்கு ஆனவரை உபகாரமாக இருப்பதுதான் ..

முன்னால ஆத்துத் தண்ணி, குளத்துத் தண்ணி இதெல்லாம் குடிச்சே நல்லாத்தான் இருந்தாங்க. இப்போ ஆர்ஓ ங்கறாங்க, அப்புறம் அதுனால பிரச்சனை வரும்றாங்க. எல்லா புதுக் கண்டுபிடிப்புகளும் புதுப் புது பிரச்சனைகளைக் கொண்டுவருதே!

# இது குறித்து நானும் பலமுறை யோசித்ததுண்டு. முன்பெல்லாம் இப்போது போல் எல்லாவற்றையும் மாசு படுத்துதல் அதிகம் இல்லாததுதான் காரணமோ ?

இப்போ நாம் குடிக்கும் பால்னால பிரயோசன் இல்லைனு படித்தேனே. உங்க அபிப்ராயம் என்ன?

# இப்போது கிடைக்கும் பாக்கெட் பால் குடித்து வளர்ந்த தலைமுறையே இருக்கிறதே.

**நம்மிடம் 1கோடி இருந்தால் (சொத்து மற்றும் பணம்) வாழ்க்கையை நன்றாக கழித்துவிட முடியாதா? சரி... பெரிய அரசியல்வாதிகளுக்கு 10 கோடி இருந்தால் பத்தாதா? எது அவங்களை, 5000 கோடி, 10000 கோடி, 40,000 கோடி என சொத்து சேர்க்கத் தூண்டுகிறது? அதன் பலன் என்ன?**

# இது பற்றி இதே போன்று நானும் யோசித்ததுண்டு.

ஓரளவுக்கு மேல் பணம் சேர்ந்தவுடன் குடும்பத்தில் அனைவர்க்கும் தலா பலகோடி இருக்க வேண்டும் எனத் தோன்றும் போலிருக்கிறது.
அதன்பின் ஒரு சொந்தமாக தீவு, ஏகே 47 ஏந்திய காவலர் பட்டாளம் இதற்கெல்லாம் கூட சேர்க்க வேண்டுமே..
தேர்தலில் வெற்றி பெற ஒரு நூறு கோடி, தோற்றால் வழக்கு வராமல் தடுக்க ஒரு நூறு இப்படி முடிவில்லாமல் தேவை நீண்டுகொண்டே இருக்கும் போல் இருக்கிறது.
பாங்க்கில் போட்டு வட்டி பெற இயலாது என்பதால் வட்டிக்காக ஒரு ஐம்பது கோடி, செல்லாத நோட்டு ஆனால் சமாளிக்க ... இப்படி தொடர்கதை - டீவி சீரியல் போல இருந்தால் நாம் எல்லாம் என்ன ஆவது ?

**ரமா ஸ்ரீனிவாசன் :**

**1. ஒரு மனிதன் தன் உயிரை மாய்த்துக் கொள்ள முடிவெடுப்பது அவன் டி.என்.சி.யில் உள்ள ஓர் அமைப்பா அல்லது அவனது வாழ்க்கை சூழலில் உள்ள பல வருத்தங்கள், வித்தியாசங்கள் மற்றும் வெளியே சொல்ல முடியாத மனஉளைச்சல்களின் உந்துதலா? இது என் நீண்ட நாளைய சந்தேகம். ஏனெனில் நான் கண்ட சில மிகத் தெரிந்தவர்களின் தற்கொலை நிகழ்வின் முன்னர் அவர் மிகவும் உற்சாகத்துடனும் ஒரு பாசிடிவிடியுடனும்தான் (Positivity) காணப் பட்டிருக்கிறார், பழகியிருக்கிறார். பின்னர், ஏன் இந்த திடீர் முடிவு?**

# தற்கொலை என்பது ஒரு க்ஷண நேரம் மனம் வெதும்பி புத்தி பேதலிப்பதால் நிகழ்கிறது என சில நிபுணர்கள் கூறுகின்றனர்.

**2. ஒருவர் தன் குடும்பத்தின் வரையறைக்குள் இருந்து தன் மூதாதையர் கற்று கொடுத்தது போல் தன் மாமனார், மாமியார், நாத்தனார், மச்சினர் யாவருக்கும் நேர்மையாக உழைத்து குடும்பத்தை ஓர் நல்ல பல்கலைக் கழகமாக கொண்டு செல்ல எண்ணும்போது அவருடைய குடும்பத்தினரே அவரை பதம் பார்க்க நினைப்பது ஏன்?**

# தனி நபர்கள் மனோபாவங்களை நன்கு உணர்ந்து கொண்டால், அவை நம்மை அதிகம் பாதிக்காது.
"பதம் பார்க்க" என்று எதைச் சொல்கிறீர்கள் என்று புரியவில்லை. நம்மைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் நேரடியாகவோ வம்பாகவோ சொல்வது என்று வைத்துக் கொண்டால், நான் சொல்வது: "இதுவும் மனிதர்க்கு இயல்பு".

3. வாழ்க்கை நடந்து கொண்டே இருக்கும்போது, திடீரென ஒரு நேரம் எனக்கு இன்று அல்லது இன்னும் சிறிது நேரத்தில் ஏதோ விபரீதம் அல்லது வேண்டாத நிகழ்ச்சி நடக்கப் போகிறது என்று தீவிரமாகத் தோன்றும். உடம்பு படபடப்பாகும். மனம் எதிலும் செல்லாது. அதே போல் பெரிதாகவோ சிறிதாகவோ ஏதோ ஒன்று நடந்து விடும். இது நான் பல முறைகள் எதிர் கொண்ட ஓர் வித்தியாசமான உணர்ச்சி. இது ஏன் நடக்கிறது? எனக்கு மட்டுமேவா அல்லது உங்கள் யாருக்காவது இப்படி ஓர் அனுபவம் உண்டா?

# இந்த வகை உணர்ச்சி முன்கூட்டியே வந்ததாக நினைப்பது ஒருவகையான பிரமை என வல்லுனர்கள் சொல்கிறார்கள்.

4. நம்மை விட்டு தங்கள் நல்ல எதிர்காலத்திற்காக வெளியூரோ அல்லது வெளி நாடோ செல்லும் நம் பிள்ளைகள் அங்கு நன்றாக காலூன்ற வேண்டும், நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று ஆணித்தரமாக இங்கு பெற்றோர்களாகிய நாம் செய்யும் பிரார்த்தனைகள் பல நேரங்களில் பலன் அளிப்பதை நான் கண் கூடாகப் பார்த்திருக்கின்றேன். இது ஓர் தற்செயலாக நிகழ்வா அல்லது "blood is thicker than water" என்ற பழமொழிக்கேற்ப பெற்றோரின் மனமுவந்த பிரார்த்தனைகளுக்கு இறைவனின் செவி சாய்த்தலா?

# அவர்கள் பொறுப்பாக நிதானமாக இருப்பது அவர்களது நல்லியல்பே தவிர நமது பிரார்த்தனை காரணமாக அல்ல என்று நான் நினைக்கிறேன்.

Q: In Which Battle Did Napoleon Died?
A: His Last Battle.

Q: Where Was The Declaration Of Independence Signed?
A: At The Bottom Of The Page.

Q: River Ravi Flows In Which State?
A: Liquid.

Q: What's The Main Reason For Divorce?
A: Marriage.

Q: What's The Main Reason For Failure?
A: Exams.

>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

# யார் நீ? ஸ்ரீராம்

## அந்த மாலை 1/4

"உங்க ரசனையைதான் பார்க்கறேனே... எனக்கு நீங்க பொண்ணு பார்க்க வேணாம்... பழம் பழமா பார்ப்பீங்க.. நானே பார்த்துக்கறேன்... இப்போ எனக்கு கல்யாணம் வேண்டாம்..."

வினோத் சத்தமாக பேசினான்.

"இப்படியே சொல்லு... நாலு வருஷமா கேட்டுக்கிட்டிருக்கோம்... பொண்ணு கிடைக்கறது அவ்வளவு சுலபம்னு நினைச்சியா? இப்படியே போனா கல்யாணமே ஆகாதுடா..." மூர்த்தியும் எரிச்சலுடன் கொஞ்சம் சத்தமாகவே பேசினார். அது அவர் இயல்புக்கு மாறானது.

"அப்படியே இருந்துட்டுப் போறேன் போ..."

ஸ்வாமி முன் அமர்ந்து ஸ்லோகம் சொல்லிக்கொண்டிருந்த ரேணு மகனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அப்படியே கணவரை ஒரு பார்வை பார்த்துவிட்டு ஸ்லோகத்தில் கவனமானாள்.

"எப்படியோ உன் அக்கா இந்துவுக்குக் கல்யாணம் பண்ணி வச்சிட்டோம்... உங்க ரெண்டு பேரோட பெரிய பாடா இருக்கு... ச்சே...."

மூர்த்தி வெளியேறினார். வாரத்தில் மூன்று நாட்கள் அவர் அந்தத் தெரு முனையில் இருக்கும் உணவகத்துக்குச் செல்வார். அங்கு கிடைக்கும் பொங்கலும், இட்லி சாம்பாரும் அவருக்கு அவர் பழைய நாட்களை நினைவு படுத்துகிறதாம். அங்கே ஆற அமர அமர்ந்து சாப்பிட்டு விட்டு மெதுவாகத்தான் வருவார். ஓய்வுபெற்று ஒரு வருடம் ஆன நிலையில் இது சமீப காலங்களின் வழக்கம் ஆகிப் போயிருந்தது.

அதுவும் இது மாதிரிப் பேச்சுகள் சமீப காலமாய் வீட்டில் அதிகமாகி இருந்தன. 'அவர்கள் வேண்டாம் என்றுதான் சொல்வார்கள். நீங்கள்தான் பார்க்கவேண்டும், முடிக்க வேண்டும்' என்று நண்பர்களும் உறவினர்களும் சொல்லிக் கொண்டிருக்க, அவர்களுக்கு தன் வீட்டின் நிலை தெரியவில்லையே என்று நினைத்துக் கொள்ளுவார் மூர்த்தி. பிடிவாதக்கார மகன். 'உனக்கு முடிச்சுட்டுதான் சின்னவனுக்குப் பார்க்கவேண்டும்' என்று சொன்னால் கூட, 'ஓ.. அப்படி எமோஷனல் பிளாக்மெயில் செய்கிறீர்களா?' என்பவனை என்ன சொல்வது?

இந்துவிடம் சொல்லிப் பேசிப்பார்க்கச் சொன்னார். அவளும் முயன்று பார்த்து "அப்பா... பேச்சை எடுத்தாலே கத்தறான்.." என்று விட்டாள்.

ஹோட்டல் வந்து விட்டது. உள்ளே நுழையும்போதே கல்லாவில் இருப்பவர் புன்னகைத்து, தலையசைத்து வரவேற்பை வெளிப்படுத்தினார். உள்ளே பார்த்தார்.



ஏ ஸி அறையினுள் நுழைந்து இருப்பதிலேயே கடைசி இருக்கையில் அமர்ந்து கொண்டார். அப்படி அமர்ந்தால் பரிமாறுபவர் மெதுவாகத்தான் அவர் இருப்பிடம் வருவார். அது அவர்களுக்குள் உடன்பாடு. மெதுவாய் யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பார். வருபவர்கள் போகிறவர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பார். சமயங்களில் கையில் டைரியோடு வருவார். எதையாவது எழுதிக் கொண்டிருப்பார்.

உடனே செல்ல வேண்டும் என்றால் முன்னாலேயே அமர்ந்து சாப்பிட்டுவிட்டுக் கிளம்புவார். ஆனால் அங்கு எந்த வேளைகளிலும் நெருக்கும் கூட்டம் எப்போதுமே இருக்காது.



இவர் அமர்ந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உள்ளே நுழைந்த ஒரு இளம்பெண் அங்குமிங்கும் பார்த்துவிட்டு, போன் பேசியபடியே இவர் இருக்கைக்கு வந்தாள். சின்ன குரலில் பேசியபடியே எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தாள். அழகாக இருந்தாள்.

அவள் வந்ததால் அருகே வந்தார் சர்வர். வந்தவள் ஃபோனை அமர்த்திவிட்டு "ஸ்டார்ட்டர் என்ன இருக்கு?" என்று கேட்க, அவளிடம் மெனு கார்டை கொடுத்துவிட்டு இவரைப் பார்த்தார் சர்வர்.

"சாம்பார் இட்லியா? கொண்டுவந்து விடவா?"

தலையாட்டினார் மூர்த்தி. சர்வர் அகன்றார்.

நேரம் ஊர்ந்தது.

அவள் ஓரிருமுறை இவரைப் பார்ப்பதும், ஏதோ யோசிப்பதுமாக இருந்தாள். ஏதோ ஒரு தவிப்பு அலலது ஆயத்தம் தெரிந்தது அவளிடம். வேறு இருக்கைக்கு மாறலாமா என்று யோசித்தார் மூர்த்தி. நல்ல யோசனை என்று தோன்றவே எழ ஆயத்தமானார்.

இவரைப்பார்த்து புன்னகைத்தாள் அந்தப்பெண். "குட் ஈவினிங் அங்கிள்... ரொம்பக் கவலையாய் இருக்கீங்க போல.."

'அதைப்பற்றி உனக்கென்ன' என்பது போல ஆச்சர்யத்துடன் அவளை நிமிர்ந்து பார்த்தவர் நெற்றியைச் சுருக்கினார். "என்னையா கேட்கிறாய்?" என்றது நெற்றிச் சுருக்கம்.

"என் பெயர் வினோதினி அங்கிள்... இன்ஃபோசிஸ்ல வேலை பார்க்கறேன். இப்போதைக்கு 70,000 தர்றாங்க..."

"இதை எல்லாம் ஏன் என் கிட்ட சொல்றீங்க?"

"நீன்னே சொல்லலாம் அங்கிள்... சின்னப் பொண்ணுதான் நான்.."

அதற்குள் சர்வர் அவளுக்கு அவள் கேட்ட மஷ்ரூம் சூப் கொண்டுவந்து கொடுக்க, அவளை அதை எடுத்து ஸ்பூனால் அளைந்தாள். எதிரில் இருந்த சிறு டப்பாவிலிருந்து பெப்பர் எடுத்து சூப்பில் தெளித்துக்கொண்டாள்.

'பெயர் விநோதினியா? என் பையன் பெயர் வினோத்... என்ன பொருத்தம்! இப்படிப் பேர் இருந்தாலே அனா பினாவா இருப்பாங்க போல'

"ஸாரி அங்கிள்... அதிகப்ரசங்கி போல பேசறேனா? உங்க ஏகாந்தத்தைக் கெடுக்கறேனா?" புன்னகையுடன் கேட்டாள் அந்தப் பெண்.

ஒன்றும் பேசாமல் அவளை பார்த்துவிட்டு சர்வர் வருகிறாரா என்று பார்த்தார் மூர்த்தி. 'ஏதாவது ஏமாத்துப் பொண்ணோ? பணம் கிணம் பறிப்பாளோ... ஏதாவது ஏடாகூடம் ஆகிடுமோ...'

இட்லி சொல்லாமல் கிளம்பி இருக்கலாம் என்று தோன்றியது மூர்த்திக்கு. இப்போதான் என்ன போச்சு? கிளம்பி சர்வரிடம் போய் வேண்டாம்னு சொல்லிட்டு நடந்துடலாம். மறுபடியும் எழ நினைத்தார்.

அதற்குள் சிறு இட்லிகளை சாம்பாரில் குளிப்பாட்டிக் கொண்டுவந்து வைத்து விட்டு, 'வடை வேணுமா?' என்று கேட்டு விட்டு ஒரு அதிருப்தியான மறுப்பை பதிலாய்ப் பெற்றுக்கொண்டு நகர்ந்தார் சர்வர்.



ஸ்பூனால் இட்லிகளை யோசனையுடன் மெதுவாய்ச் சிதைத்து சாம்பாரில் ஊறவிட்டார் மூர்த்தி. ஒரு ஸ்பூன் எடுத்து வாயில் போட்டுக்கொண்டார்.

தொடர்ந்து தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் பார்வை சங்கடப்படுத்தியது. சாம்பாரில் ஊறிய இட்லியின் ருசி கூட மனதில் பதியவில்லை.

"வினோத் ரொம்பப் படுத்தறானா அங்கிள்?

சட்டென நிமிர்ந்தார் மூர்த்தி. "யார் நீ?"

(தொடரும்)



>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

# பலசரக்கு :: ஸ்ரீராம்

## கவிதை ஒன்று!



ராஜஸ்தான் வெட்டுக்கிளிகளாய்
சுற்றிப்பறக்கின்றன
எண்ணங்கள் மனதில்..

அதை
எழுத நினைக்கும்போது
ஊரடங்கு நேரத்தில்
ட்ரோன் கண்டு ஓடிஒளியும்
விளையாட்டுப் பிள்ளைகளாய்
மறைந்துபோகின்றன வார்த்தைகள்

கொட்டிக்கிடக்கும் எழுத்துகளிலும்
வார்த்தைகளிலும்
என்
எண்ணங்களை வடிவமாக்க
பொறுக்கி எடுத்துப்
போராடினாலும்
தொடர்பறுந்துபோன தொலைக்காட்சி போல
வெற்றுத்திரையாகவே
இருக்கிறது மனவெளி.

இது ஜோக் என்றும் கொள்ளலாம். அரசியல் கார்ட்டூன் என்றும் சொல்லலாம்!





## இதுவும் அங்ஙனமே...!




## ஆனா அடுத்தது நிஜமாகவே ஜோக்.. ரசிக்கக்கூடிய ஜோக்!




இங்கே போயிருக்கிறீர்களா" என்று சாவி ஒரு தொடர் எழுதினார். அதற்கான கோபுலு ஓவியம்.. ஓவியத்தை விளக்கமாகப் பார்த்து முடிக்கவே நேரமாகும்! எவ்வளவு காட்சிகள்!



இன்னொரு தொடர்.. இதுவும் சாவி, கோபுலு இணையில்... தலைப்பிலேயே ஓவியர் பெயரும் இடம்பெற்றிருக்கிறது பாருங்கள்!



# அந்நியர் ஆண்ட பூமி

சாவி-கோபுலு

......கோவாவில் ஓடும் நதிகளைக் கடந்து செல்ல இத்தகைய மோட்டார்ப் படகுகள் நிறைய இருக்கின்றன......

**கோவா இந்துக்கள்:**

போர்ச்சுகீசிய மொழி எனக்கு எப்படித் தெரிந்தது என்னும் ரகசியத்தை இப்போது நேயர்களுக்கும் சொல்லி விடுகிறேன்.

ஆங்கில மொழி பெயர்ப்புடன் கூடிய முக்கியமான போர்ச்சுகீசிய வார்த்தைகள் அடங்கிய புத்தகம் ஒன்றை நண்பருக்குத் தெரியாமல் வாங்கி வைத்திருந்தேன். அதிலுள்ள சில வார்த்தைகளையும் உருப்போட்டு வைத்திருந்தேன். சமயம் நேர்ந்த போதெல்லாம், சந்தர்ப்பங்களுக்கேற்ப அந்த வார்த்தைகளை உபயோகித்து நண்பரைத் திணற அடித்துக் கொண்டிருந்தேன். கட்டிக் கொடுத்த சாப்பாடும், சொல்லிக் கொடுத்த வார்த்தையும் எத்தனை நாளைக்குத் தாங்காது அல்லவா? நான் உருப்போட்டிருந்த வார்த்தைகள் தீர்ந்து போகவே, என் குட்டு வெளிப்பட்டு விட்டது! அப்புறமும் ரகசியத்தைச் சொல்லாமலிருக்க முடியுமா?




போர்ச்சுகீசிய மொழி எனக்குத் தெரியாதது பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. ஏனெனில், கோவாவில் வசிப்பவர்களில் பெரும்பாலோருக்கும் அந்த மொழி தெரியவில்லை. அங்கே வாழும் சுமார் ஐந்தரை லட்சம் மக்களில் போர்ச்சுகீசிய மொழியில் நன்கு எழுதவும், படிக்கவும் தெரிந்தவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்?

ஒன்றரை சதவிகிதம்தான்!

இவ்வளவுக்கும் தங்களுடைய மொழியைப் புகுத்துவதற்கு போர்ச்சுகீசிய சர்க்கார் பட்டுள்ள பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

ஆரம்ப காலத்தில் கோவாவில் இந்து மதத்தைப் பரவ செய்ய பலாத்காரமுறையைக் கடைப் பிடித்தனர். அதைப் போலவே தங்கள் மொழியை








**>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல**

# சிந்தனை ரமா ஸ்ரீநிவாசன்



அமைதியான மனம், எண்ண அலைகள் அற்ற நிலை;
ஆயின் அதன் மூலம் நமக்கு புதிராகவே இருக்கின்றது.
என்னால் அதை அடையாளம் கண்டு கொள்ள இயலவில்லை;
ஆனால் அதன் தாக்கத்தை உணர முடிகிறது.
அதற்கு பெயரிட முடியாது
ஆயின் அதன் அத்தனை பரிணாமங்களையும் காணலாம்.
அது ஆக்கிரமித்துள்ள பஞ்ச பூதங்களும்
நேரத்தின் தொடர்ச்சியை ஊர்ஜிதப் படுத்துகின்றது.
கடந்தோடிய நேரமும் வரப் போகிற நேரமும்
இன்றைய நேரத்தில் ஐக்கியம்.
யாவையும் ஒரே நேரமாக உருண்டு திரண்டு என் முன்னால்.
பறந்தோடும் நேரமும் இல்லை; மிதக்கும் சிந்தனையும் இல்லை.
வாழ்க்கையின் எதிர்பார்ப்புகள் இல்லை;
யாவையும் நிறைவேறி விட்ட மாயை.
செடி, கொடி, மரம், மிருகம் மற்றும் மனிதன்
போன்ற படைப்பொற்றுமையின் ஆச்சரியத்தில் தெரிகிறது.
என்னால் பெயரிட இயலவில்லை
ஆயின் என் இதயத்தின் இறுதியில் தெரிகிறது.
உன் வாழ்வின் மூலம் அங்கிருப்பதை நீ அறிவாய்.
அதுவேதான் மற்றெல்லா வாழ்க்கையின் மூலமும் ஆகும்.
என்னுள் ஓர் அசைவற்ற நதியைப் போல் ஓடுகிறது.
ஆயின் அது புயலெடுக்கும்போது,
எல்லா இதயங்களுக்கும் திகில் மூட்டுகிறது.
நான் இச்சிந்தனையில் மூழ்கியிருக்கும்போதே
ஓர் கரை புரண்ட வெள்ளம் போல் என்னை அடித்துச் செல்கின்றது.

>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

# எல் டொரடோ ல - எல்லாமே தங்கம் ! KGG

பல நூற்றாண்டுகளாக, தென் அமெரிக்காவில் சொல்லப்பட்ட பாட்டி கதைகளில் இடம் பெற்ற தங்க நகரத்தின் பெயர் எல் டொரடோ!

கி பி பதினாறாம் நூற்றாண்டு தொடங்கி, ஸ்பானிய ஆர்வலர்கள் பலர் , பாட்டி கதைகளில் சொல்லப்பட்ட தென் அமெரிக்காவின் தங்க நகரமான எல் டொரடோவைக் கண்டு பிடிக்க பெரும் முயற்சிகள் மேற்கொண்டனர். அவர்கள் பார்வையில் அந்த தங்க நகரம் சிக்கவில்லை! மூன்று நூற்றாண்டுகள் அலைந்து, திரிந்து, தேடித்தேடி இளைத்தவர்கள் பலர்! இறுதியில் எல் டொரடோ என்னும் தங்க நகரம் என்பது வெறும் கர்ணபரம்பரை கற்பனைக் கதைகளே என்று சொல்லிவிட்டார்கள்.

**இரும்புக்கு பதிலாக தங்கம்!**

**எல் டொராடோவைக் கண்டுபிடிக்க ஸ்பானியர்கள் தவறிவிட்டனர், ஆனால் அவர்கள் தென் அமெரிக்காவின் இந்தியர்களின் கோயில்களிலும் கல்லறைகளிலும் ஏராளமான தங்கத்தைக் கண்டுபிடித்தனர். இந்தியர்கள் தங்கத்தை அலங்காரம் மற்றும் ஆபரணங்களுக்கு மட்டுமல்ல, அன்றாட பொருட்களுக்கும் பயன்படுத்தினர்!**

**உன் சமையலறையில் நான் தங்கமா, தகரமா!**

**ஸ்பானியர்களின் வருகை வரை தென் அமெரிக்க இந்தியர்களுக்கு இரும்பு பற்றி தெரியாது என்பதே இதற்குக் காரணம். மறுபுறம், தங்கம் ஏராளமாகக் கிடைக்கிறது, எனவே இந்தியர்கள் இதைப் பாத்திரங்கள், சீப்பு, ஆணிகள் மற்றும் சாமணம் போன்ற பொருட்கள் செய்வதற்குப் பயன்படுத்தினர்!**



>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

## மின்நிலா 012 பற்றி வாசகர் கருத்து

**மின் நிலா வெகு அழகாக வடிவெடுத்து வந்திருக்கிறது.**

**வழக்கமான ஏபி பதிவுகளோடு ஸ்ரீதர் டிராஃப்கோ வின் பஹ்ரைன் பதிவு சூப்பரோ சூப்பர். இப்படிப்பட்ட நகைச்சுவை மன்னர்கள் முகநூலில் எழுதுவது நம் பாக்கியம்.**

**அதுவும் ஆதி குடி பற்றி எழுதியது மீண்டும் திருச்சி சென்ற உணர்வு கிடைத்தது. அதை நிர்வகிக்கும் கிருஷ்ணன் ராமகிருஷ்ணன் அவர்கள் மிக அடக்கமான மனிதர். முகநூல் நண்பர். 2014 இல் அவரைச் சந்தித்தது இன்னும் மனத்தில் நிழலாடுகிறது.**

**நிலா வளர ஆசிகள்.**
**அன்புடன் வல்லிம்மா.**



Blackberry Farm nearby
:: Revathi Narasimhan ::

**அன்புடன்,**
**ரேவதி.நரசிம்ஹன்.**

>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

## ஒளியும் ஒலியும் + விவரங்களும் : ஸ்ரீராம்

**காலைவேளை ஒரு கனவு வந்ததடி உருகினேன் பாடநூலில் தினம் செல்வி துணையென்று எழுதினேன்.**

A L ராகவன் மறைந்த நேரம், ஏகாந்தன் ஸார் நேயர் விருப்பமாக ஏதாவது ஒரு ஏ எல் ராகவன் பாடல் கேட்டிருந்தார். 'பாப்பா பாப்பா கதை கேளு' முன்பே ஒரு முறை போட்டாச்சு. 'எங்கிருந்தாலும் வாழ்க' அனைவரும் கேட்டிருப்பார்கள். அதிகமாக கேட்காத பாடலாகவும், உற்சாகமாகவும் இருக்க வேண்டி 'சுமதி என் சுந்தரி' படத்தில் இடம்பெற்ற இந்தப் பாடலை அவரின் விருப்பமாக பகிர்கிறேன். பிடிக்கவில்லை என்றாலும் பொறுத்துக் கொள்ளுங்கள் ஏகாந்தன் ஸார்!

தனது ப்ராபல்யத்தால், இழந்த சுதந்தரத்தால், வாடும் நடிகை சுமதி இந்தப் பாடல் கேட்டுதான் (எங்கேயோ ஒரு பெட்டியில் பாடும் பாடல் இவர் இருக்கும் பெட்டியில் கேட்கிறதாம்) இறங்கி அந்தப் பெட்டிக்குச் செல்ல முயல, ரயில் கிளம்பி விட, அங்கு கதை தொடங்கும்! இனிய பாடல்கள் கொண்ட இந்தப் படத்தின் வேறு சில பாடல்களை பின்னொருமுறை பகிர்வேன்.

எல்லோருக்கும் காலம் வரும்
சம்பாதிக்க நேரம் வரும்
வருவது எந்த வழியோ?

அள்ளித்தர தெய்வம் உண்டு
பூட்டி வைக்க பெட்டி உண்டு
அது வரை என்ன கதையோ?

பீச்சரபாம் பீச்சரபாம் பீச்சரபாம்

திறமையிலே எதுவுமில்லை
நேரம் அது தானே வர வேண்டும்
திருப்பதியில் உண்டியல் போல்
செல்வம் அது வீட்டில் உனைத்தேடும்

உண்டானபின் கோடி சொந்தம் வரும்
இல்லாததைச் சொல்லி வட்டமிடும்
தாகங்கள் மோகங்கள் ஜால்ராக்கள் கூஜாக்கள்
பின் பாட்டுத்தான் பின்னே வரும்

மூச்சொன்று விட்டாலும் பேச்சொன்று கை தட்டி
கொண்டாடும் கூட்டங்கள் தானே வரும் (எல்லோருக்கும்)

வாழ்வதற்கு இரண்டு வழி
நேர்மை அது தேவை சிலகாலம்
நேர்மையிலே பலனில்லையேல்
தேவை நிறைவேறும் வழி மாறும்

அப்பாவிகள் வாழ்வு தப்பானது
அஞ்சாதவன் வாழ்வு தப்பானது
எப்போது வந்தாலும் தப்பாமல் கைப்பற்று
சந்தர்ப்பம் தான் என்றும் பொன்னானது

அப்போது தூங்காதே பின்னாலே ஏங்காதே
அதிர்ஷ்டத்தில் பங்குண்டு என்றாவது (எல்லோருக்கும்)

**YOUTUBE LINK : CLICK HERE**

**இப்போது என் விருப்பம்!**




1983 இல் வெளிவந்த படம் ஆனந்தக்கும்மி. வைரமுத்துவின் கதை.

பாடல்களும் அவரே. இளையராஜா தன் மனைவி ஜீவா பெயரில் தயாரித்திருந்த படம். அப்போது வந்த அலைகள் ஓய்வதில்லை, இளஞ்சோடிகள், பன்னீர்புஷ்பங்கள் அலையில் இதுவும் ஜெயிக்கும் என்று நினைத்திருக்கலாம். பாவம்!



ஆனால் படம் ஓடவில்லை. இரண்டு புதுமுகங்கள் பாலச்சந்திரன், அஸ்வினி நடித்த திரைப்படத்தில் இரு பாடல்களைத் தவிர மற்ற பாடல்கள் அனைத்தும் தேன்.

ஒரு கிளி உருகுது உரிமையில் பழகுது, திண்டாடுதே ரெண்டு கிளியே, ஓ வெண்ணிலாவே, மற்றும் இன்று பகிரப்போகும் தாமரைக்கொடி, ஊமை நெஞ்சின் ஓசைகள் பாடல்கள்.



மகனின் காதலை முறிக்க அந்தப் பெண்ணையே திருமணம் செய்யும் நாயகனின் அப்பா... இதுதான் படத்தின் ஒன்லைன்!

ஊமை நெஞ்சின் ஓசைகள் பாடல் எஸ் பி பி - ஜானகி அம்மா பாடியது.

வசீகரிக்கும் வரிகள் இரண்டு பாடல்களிலும்.

ஜானகி அம்மா ஆரம்பிக்க சரணத்தின் இரண்டாவது வரியில்தான் இணைவார் எஸ் பி பி.

**ஊமை நெஞ்சின் ஓசைகள் காதில் கேளாதோ**
**மனம் தாங்குமோ இமை தூங்குமோ இந்த**
**ஊமை நெஞ்சின் ஓசைகள்**

**பிரிந்தாய் இன்பத்தேனே வெறுத்தேன் என்னை நானே**

எனக்கும் அதுதானே கலக்கம் என்ன மானே
நீ இல்லாமல் நடந்து போக கால்கள் இல்லையே
கனவிலேனும் கடிதம் போடு காதல் முல்லையே

உனைக்காணும் அந்த நாள் வரை
உறங்காது இந்தத் தாமரை
உன்னை நினைத்தே(ன்) உயிரைச் சுமந்தேன்

தரையோ வெகுதூரம் அலையோ தடுமாறும்
விதியோ விளையாடும் கிளியோ கி(ள்)ளை தேடும்
மூடி வைத்த காதல் இன்று மோசம் போகுமோ
மூடி வைத்த தாழம்பூவில் வாசம் போகுமோ
மலராதோ எந்தன் பூவனம் பெண்மைதானே
அதன் காரணம்
கண்ணே உறங்கு கனவை வழங்கு

**YOUTUBE LINK : CLICK HERE**






அடுத்த பாடல் எஸ் பி பி தனித்துப் பாடும் பாடல். காதலியைக் கவர காதலன் பாடும் பாடல். எஸ் பி பி கொஞ்சம் மேல் ஸ்தாயியில் ஆரம்பிக்கும் பாடல். பல்லவியே இந்த உயரத்தில் ஆரம்பித்தால் சரணங்கள்? அது இன்னும் கொஞ்சம் உசரத்தில்! இந்தப் படத்தின் பாடல்களின் நிறைய வரிகள் மனதில் அமர்ந்து அவ்வப்போது நினைவுக்கு வந்து ரசிக்க வைக்கும். உற்சாகமான பாடல்.

தாமரைக்கொடி தரையில் வந்ததெப்படி
மல்லிகைக்கொடி உந்தன் மனதிலென்னடி
உன்னை நாடி வாடினேன் சுவர் ஏறி ஓடினேன்
பலன் இல்லை என்பதால் இன்று பாதை மாறினேன்

காலைவேளை ஒரு கனவு வந்ததடி உருகினேன்
பாடநூலில் தினம் செல்வி துணையென்று எழுதினேன்
வீட்டுப்பூனை நான் வேங்கை போலவே மாறினேன்
வேளை வந்ததடி நானும் எல்லைகளை மீறினேன்

வேலை செய்வதில் நான் காதல் மன்னனே
லீலை செய்வதில் நான் பாதி கண்ணனே
அல்லி ராணி அள்ள வா நீ அர்ச்சுனன் நானே

மூக்கின்மீது நிறம் மாறிப்போனதடி கோபமோ
என்னை மீறி ஒரு தந்தி வந்துவிடக் கூடுமோ
பந்தம் உள்ளதில் சொந்தம் கொள்வதில் பாவமோ
ஆசை கோபமாய் வேஷம் போடுது நியாயமோ

லோகம் எங்குமே பனிதூங்கும் புல்வெளி
பாடிவந்து நீ விளையாடு பைங்கிளி
ஊடல் கொள்ள நேரமில்லை வரம் கொடு தோழி

YOUTUBE LINK : CLICK HERE

>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

# நாடி ஜோதிடம் ( ஒன்று ) வல்லிசிம்ஹன்

நாடி ஜோதிடம் எங்கள் வாழ்வில் வந்தது மிக நூதனமான முறையில் தான்.
1990 ஆண்டு சில பல தொழில் முறை மாற்றங்களைச் சந்திக்க வேண்டி வந்தது.

பசங்களின் படிப்பு சம்பந்தமாக சில முடிவுகளை அதாவது அவர்கள் எடுத்த முடிவுகளுக்கு உதவி செய்ய வேண்டும்.

எல்லோருக்கும் வாழ்க்கையில் சந்திக்கும் சம்பவங்கள் தான். என்னைப் பொறுத்தவரை என் தந்தை காட்டிய வழியில் ஒரு ஜோதிடர் சில பூஜா வழிகளைச் சொல்லிக் கொடுத்து அதைப் பின்பற்றியதில், இராமாயணம் தொடர்ந்து படிப்பது, விளக்கு பூஜை செய்வது , கந்த சஷ்டி கவசம் சொல்வதுஅதாவது மனதை நேர்மறை வழியில் திருப்ப உதவி செய்தது.
எனக்கு வெற்றியே.

சிங்கத்துக்கு ஒரு நல்ல தோழர் இருந்தார். அவருக்கு ஜோதிட சாஸ்திரம் தெரியும். கிண்டி தொழில் பேட்டையில் இருந்த பட்டறையை இடம் சரியில்லை, மாற்றிவிடு என்றார். காஞ்சீபுரம் போய் நாடி ஜோதிடம் பார்க்கிறியா என்றார். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

“ நாடியை வைத்தியர் அல்லவா பார்ப்பார்? ஏண்டா அவரை இழுக்கறே” என்றதும் அவர் சிரித்து விட்டார்.

இல்ல நாடி என்பது சில பேருக்குத்தான் கிடைக்கும். பழைய காலங்களில்
எழுதிவைத்தது என்றார். அவரிடம் விவரம் விசாரித்துக் கொண்டு அவர் சொன்ன காஞ்சிபுரம் அகஸ்திய நாடி என்ற இடத்தைத் தேடிச்சென்றோம்.

ஸ்ரீ வரதராஜர் கோவில் வாசலில் வந்தனம் சொல்லி அந்த மதிலோடு போனால் ஒரு புற நகர் குடியிருப்பு. விசாரித்துக் கொண்டு சென்றோம். ஒரு சிறிய வீடு. வாசலில் போர்டு. உரிமையாளர் பெயர்.




**அதை ஒட்டி ஒரு பந்தல். உள்ளே இருட்டாக இருந்தது.**
**நாங்கள் தயங்கி நிற்பதைப் பார்த்து உள்ளிருந்த இளைஞர் வெளியே வந்து விசாரித்தார்.**

**நாடி பார்க்க வந்திருப்பதாகச் சொன்னோம். அங்கே இருந்த பெஞ்சில் அமரச் சொன்னார். முன்பு இது போல ஜோதிடம் பார்த்ததுண்டா என்று கேட்டார்,**

**எப்படிப் பார்ப்பீர்கள் என்று கேட்டதற்கு உங்கள் கை ரேகை எடுத்துக் கொள்வோம். பிறகு உங்களுக்குச் சொல்வதற்கான வேளை இருந்தால் ஓலை கிடைக்கும். படித்து சொல்வோம். உங்கள் பெயரை இந்த சீட்டில் அடையாளமாக எழுதிக் கொடுங்கள் என்றார். எங்கள் கட்டைவிரல் ரேகைகளை எடுத்துக் கொண்டார். என் பெயரைக் கேட்கவில்லை.**
**" நீங்கள் கோவில்கள் சென்று வழிபட்டு, உணவை முடித்துக் கொண்டு வாருங்கள். எங்களுக்கு, ஓலை தேட இரண்டு மணி நேரம் தேவை" என்றார். நாங்களும் அந்த இடத்தை விட்டு எங்கள் ஃபியட் வண்டியில் ஏறி வரதராஜர் கோவிலுக்கு வந்து வழிபட்டுவிட்டு சரவணபவன் சென்று மதிய உணவை முடித்துக் கொண்டோம்.**

**(தொடரும்)**

நாடி ஜோதிடம் ஒரு பழங்கால விஞ்ஞானம் ஆகும். இதைப் பற்றி யாஹூ-அகத்தியர் குழுமத்தில் மருத்துவர் ஜெ.பி. அய்யா அவர்கள் எழுதிய ஒரு தொடரை உங்களுக்காக வழங்குகிறேன். இதில் படியெடுத்து ஒட்டியதைத் தவிர என்னுடைய வேலை ஒன்றுமில்லை. அனைத்தும் மருத்துவர் அய்யாவையே சாரும். "நாடி ஜோதிடம்" "இதயம்" இரு வார இதழ் - 1992 ஆசிரியர் M.துரைராஜ் மலேசியா இறந்த காலம், நிகழ்காலம்,வருங்காலம்ஆகியவற்றைக் கண்டறியும் ஆற்றல் படைத்த நிபுணர்கள் இருந்தனர். அவர்களைத் "திரி கால ஞானிகள்" என்றுஅழைப்பர். இவர்களில் பலர் முனிவர்களாகவும்,ரிஷிகளாகவும், சிலர் சித்தர்களாகவும் விளங்கினர். அவர்களுக்கு ஞானதிருஷ்டி எனப்படும் விசேடப் பார்வை இருந்தது. அதை வைத்து அவர்கள் எக்காலத்திலும் நடக்கும் நிகழ்வுகளைக்கண்டறிந்தார்கள். ஜோதிட விதிகளையும் யாத்து, நிகழ்வுகளுடன் ஏற்ற முறையில் தொடர்பு படுத்தி அவற்றை நெறிப்படுத்தித் தொகுத்து எழுதிவைத்துச்சென்றனர். அத்தகையதோர் சாஸ்திரம் தமிழ்நாட்டில் உண்டு. அதன் பெயர் "நாடி சாஸ்திரம்" அதை "ஏடு பார்த்தல்" என்றும் அழைப்பர். ஏனெனில் அந்த நூல்கள் பாடல்களின் வடிவில் பனை ஓலையால் ஆன ஏட்டுச்சுவடிகளில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ரிஷிகளும் சித்தர்களும் எதிர்காலத்தில் வாழப்போகும் குறிப்பிட்ட மனிதர்களைப் பற்றியும் அவர்களின் ஜாதக அமைப்புகளைப்

>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

**B POSITIVE by SRIRAM**

## அன்னபூரணி ஆன ஜெயமேரி.

1) அவர்களுடன் வந்த மற்ற வாலிபர்கள், சத்தம் போட்டதை கேட்டு, அப்பகுதியில் துணி துவைத்துக் கொண்டிருந்த, ஆதனூார் கிராமத்தை சேர்ந்த ராமச்சந்திரன் மனைவி செந்தமிழ் செல்வி, 38, சுந்தரபாலன் மனைவி முத்தம்மாள், 34, அண்ணாமலை மனைவி ஆனந்தவல்லி, 34, ஆகியோர், சிறிதும் தாமதிக்காமல் தண்ணீரில் குதித்து நீந்தி சென்றனர்.உயிரை பணயம் வைத்த பெண்கள், தாங்கள் அணிந்திருந்த சேலையை அவிழ்த்து, ஒன்றாக சேர்த்து கட்டி, நீரில் தத்தளித்த வாலிபர்களை நோக்கி வீசினர். சேலையை பிடித்து கொண்ட பவின்குமார், கார்த்திக் ஆகியோரை மீட்டு, கரைக்கு கொண்டு வந்து சேர்த்தனர்....



2) அந்த பிள்ளைகளுக்கு பாடம் கற்பித்துக் கொடுப்பதால், எனக்கு சம்பளம் கிடைக்கிறது. பள்ளி திறக்கப்படாமலேயே எனக்கு சம்பளம் வருகிறது; ஆனால், அந்த குழந்தைகளுக்கு உணவு கிடைக்கவில்லை.இதனால், அந்த குழந்தைகளுக்கு தினமும் மதிய உணவு அளிக்க முடிவு செய்து, வீட்டில் சமைத்து எடுத்துச் சென்று, என் வகுப்பில் படிக்கும், 30 குழந்தைகளுக்கும் முதலில் வழங்கினேன்.....

தான் பணியாற்றும் பள்ளி, கொரோனா ஊரடங்கால் மூடியிருக்க, அங்கு படிக்கும் மாணவர்களுக்கு, தினமும் மதிய உணவளித்து வருவது பற்றி, ஆசிரியை ஜெயமேரி.

பேஸ்புக்கில் பகிரப்பட்ட இந்தச்செய்தி இதுவரை 3750 க்கும் மேற்பட்ட நண்பர்களால் 'விரும்ப'ப் பட்டு, 1700 க்குப் பக்கமாக பகிரப்பட்டுள்ளது.



3) ஊரடங்கால் வாழ்வாதாரம் இழந்தோர் வாழநினைத்தால் வாழலாம் என்பதற்கு நானும் ஒரு உதாரணம், என்றார் மதுரை சூர்யா நகர் சரவணன்......




4) முகமது ஹபீப். ஆட்டோவுக்கான தினசரி வாடகையைக் கூட கட்ட முடியாமல் தவிக்கும் இவர், தன் ஆட்டோவில் பயணி ஒருவர் தவறவிட்ட ரூ.1.4 லட்சத்தை நேர்மையாக அவரிடமே ஒப்படைத்துள்ளார்.



>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

# அதிர்ச்சி … ஆனால் உண்மை ரமா ஸ்ரீநிவாசன்



நாங்கள் சென்னை நுங்கம்பாக்கத்தில் கடந்த அறுபது வருடங்களாக வாழ்ந்து வருவதால் எனக்கும் என் கணவருக்கும் பெரும்பான்மையாக இங்கு வாழும் அனைவரையும் தெரிந்திருக்கும் வசதியுள்ளது.

அப்படித்தான் அவரையும் அவரது மனைவியையும் எங்கள் இருவருக்கும் குடும்ப நண்பர்களாகத் தெரிய வந்தது. மேலும் அவர் நாங்கள் பணி புரியும் மத்திய கலால் துறையில் என் கணவருடன் பணி புரிந்தவர். எனவே இன்னும் நன்றாக பழகி பேசி நெருக்கமான உறவு. அவரது மனைவி மத்திய அரசில் மேலதிகாரியாகப் பணி புரிபவர். அவர்களுக்கு ஒரே மகன். அவரைப் பற்றி ஒரு வரியில் எழுத வேண்டும் என்றால் "HE IS A NOBLE SOUL" என்று எழுதலாம்.

வாழ்க்கை மிக ஸ்வாரஸ்யமாகத்தான் இருவருக்கும் சென்று கொண்டிருந்தது. இருவரும் மிகவும் சாஸ்த்திரோத்தமான வைஷ்ணவக் குடும்பத்தை சேர்ந்தவர்கள்.

இருவரும் அலுவலகத்திற்கு சென்று வந்து கொண்டிருந்தனர்.

இருவருமே ஒரே இடத்தில் பணி புரிபவர்கள். போன மாதம் ஒரு நாள் மனைவி காய்ச்சலுக்கும் வாசமின்மைக்கும் ஆளானாள். உடனே தன்னை பரிசோதனைக்கு ஆளாக்கி கொண்டதன் பேரில் அவள் "கொரோனா பாசிடிவ்" என்பது தெரிய வந்தது. உடனடியாக அவர் ஓமந்தூரார் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சைப் பெற்று வந்தார். அதே வீட்டில் இருந்த அப்பாவும் பையனும் தங்களைத் தனிமைப் படுத்திக் கொண்டனர். கணவருக்கு நீரிழிவு நோயும் இருந்ததால் மிகவும் ஜாக்கிரதையாக தன் உடல்நிலையை எப்பொழுதுமே பார்த்துக் கொள்வார்.

பதினான்கு நாட்கள் கழித்து மனைவி இல்லத்திற்கு திரும்பினார்.

இருவரும் உடம்பு தேறிய பின் தங்கள் அலுவலகங்களுக்கு செல்ல ஆரம்பித்தனர். தன் மனைவி கொரோனாவில் பாதிக்கப் பட்டதிலிருந்தே

அவர் மிகவும் கவலையுடனும் குழப்பத்துடனும் காணப்பட்டார். அவருடைய ட்ரேட் மார்க் கலகலப்பு மொத்தமாக காணாமல் போய் விட்டது.

வீட்டில் மூவருமே குழப்பத்திலும் பயத்திலும் இருந்ததால் ஒருவர் மற்றவரை கண்காணிக்க முடியவில்லை, எத்தனிக்கவும் இல்லை.

தன் சொந்த வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு நான்கு மாதங்கள் முன்தான் அருகிலேயே உள்ள ஒரு பெரிய மூன்று பெட் ரூம்கள் கொண்ட வீட்டிற்கு குடி பெயர்ந்தார்கள். எனினும் சொந்த வீட்டில் சில கட்டுமான வேலைகள் நடப்பதால் அடிக்கடி சென்று கண்காணித்து விட்டு திரும்புவார்  கணவர்.

ஆடி வெள்ளியான அன்று (ஜூலை 7ஆம் தேதி) அவ்வாறு சொந்த வீட்டைப் பார்க்க போகிறேன் என்று கூறி விட்டு போனவர் இரண்டு மணி நேரம் ஆகியும் திரும்பி வராததால் கவலையுற்ற அவர் தாய் தன் பேரனை உஷார்ப் படுத்தி, போய் சொந்த வீட்டில் பார்த்து,  தந்தையை அழைத்து வரப் பணித்தார்.

சொந்த வீட்டிற்குள் நுழைந்து சுற்று முற்றும் தேடி, தந்தையைக் காணாத மகன் ஒரு படுக்கையறைக்குள் எட்டிப் பார்த்து, அங்கு கண்ட காட்சியைப் பார்த்து உறைந்து போனான். மின் விசிறியிலிருந்து அவனது அப்பா தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார்.

சுதாரித்துக் கொண்டு, தன் வீட்டிற்கு ஓடி தன் தாயாரிடம் கண்ட காட்சியை கூறி  காவல் நிலயத்திற்கு தகவல் சொன்னான்.

காவலர்கள் வந்து அருகில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு அதி வேகமாகச் கூட்டிச் சென்றும் அவர் ஆவி பிரிந்து இரண்டு மணி நேரமாகி விட்டது என்று மருத்துவர்கள் கூற, தற்கொலை என்ற காரணத்தால் அவர் உடலைப் போஸ்ட் மார்ட்டம் செய்து உறுதி செய்து வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

சனிக்கிழமை காலை அவரது இறுதி யாத்திரை நடந்தது.

எங்கள் வீட்டில் வயது முதிர்ந்த மாமியார் இருப்பதாலும் கொரோனா நோயின் பயத்தாலும் நாங்கள் இருவரும் சென்று கடைசியாக அவரைப் பார்க்கக் கூட முடியவில்லை.

நண்பர்களே, இந்த நிகழ்ச்சி மனத்தை அழுத்தினாலும் வருத்தத்தை

தருவதாக இருந்தாலும் உங்களுடன் நான் பகிர்ந்து கொள்வதற்கு ஒரு  மிக முக்கிய காரணம் இருக்கின்றது.

கொரோனா நோய் கொடியதாக இருக்கலாம். பல மனிதரின் உயிரைக் குடித்திருக்கலாம். ஆனால், அது அவ்வளவு பயப்படும்படியான ஒன்று இல்லை என்பதே என் கூற்று. அதை நினைத்து அரைகுறை புரிதலுடன் நாமாக ஏதோ முடிவிற்கு வரக் கூடாது.

இந்நோயிற்கு மிகவும் அவசியமான ஒரு குணம் தைரியம். இது ஒரு சாதாரண இருமல், சளி, ஜூரம் போல் வந்து நன்றாக வைத்தியம் செய்தவுடன் போயே போய் விடும்.  இந்நோயின் முதல் எதிரி பயம்தான்.

மேலும் ஒரு மிக முக்கியமான என் மனத்தில் பட்ட ஆலோசனை. நண்பர்களே, யாருக்கு, எப்போது, என்ன நடக்கும் என்பது நாம் அறியாத ஒன்று. அப்படி இருக்கையில் நமக்கு தெரிந்த ஒரு நபரோ பக்கத்து வீட்டுக்காரரோ கொரோனா பாதிப்பில் விழுந்து சிகிச்சைப் பெற்று குணமாகி வீடு திரும்பும்போது அவருக்கு நாம் முதன்மையாக காண்பிப்பது மனித நேய மாகத்தான் இருக்க வேண்டும்.

நம் மனதிற்குள் பயம் இருப்பது இயல்பு. நீங்கள் எட்ட நின்று அவரை நலன் விசாரிக்கலாம். அல்லது எல்லா கட்டுப்பாடுகளையும் கடைப்பிடித்து உ ங்கள் வசதிக்கேற்ப அவர்கள் வீட்டிற்கு காபியோ உணவோ கூட தயார் செய் து அனுப்பலாம். இவை யாவையும் வீட முக்கியம் நீங்கள் அவரை உங்கள் வ ட்டத்திற்குள் இன்றும் வைத்திருக்கின்றீர்கள் என்பதை ஐயமின்றி தெளிவாக அவரிடம் வெளிப்படுத்துவதுதான்.

தயவு கூர்ந்து எந்த மனிதனையும் கொரோனா பாதிக்கப் பட்டதால் மட்டும் ஒ ரு வித்தியாசமான கண்ணோட்டத்துடன் பார்க்காதீர்கள். ஏனெனில் அவருக் கு கொரோனா நோய் வந்ததற்கு அவர் காரணமில்லை. அதே போல் கொரோ னா பாதிக்கப் பட்டு வெளி வந்த பின் தான் சமுதாயத்தால் ஏற்கப் படுகின்றோ ம் என்ற புரிதலே அவருக்கு யானை பலத்தைக் கொடுக்கும்.

ஆகவே, நண்பர்களே, மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.
நான் திரும்பத் திரும்பக் கூறுகிறேன் : “இதுவும் கடந்து போகும்”.
ஆனால், அது கடந்து போகும் வரையில் நாம் தைரியமாக உயிருடன் இருந்து ஜெயிக்கும் பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மறைந்த  நண்பருக்கு வாழ்க்கை முடியும்போது வயது 54.

அவரது ஒரே மகன் இப்போதுதான் சி.ஏ. படித்துக் கொண்டிருக்கின்றான். அவர் மட்டும் தன் நண்பர்களிடன் தன் பயத்தை பகிர்ந்து கொண்டி ருந்தாலோ அல்லது தன் குடும்பத்தாருடன் அளவளாவியிருந்தாலோ இந்த வருந்தத்தக்க முடிவை நிறுத்தியிருக்கலாம்.

ஒரு தாய் தன் மகனை இழந்து பரிதவிக்கின்றாள். ஒரு மனைவி தன் கணவனை இழந்து நொறுங்கி போயிருக்கின்றாள். ஒரு மகனோ தன் வாழ்க்கையில் எந்த நல்லது கெட்டதையும் காணாது குடும்ப பொறுப்பு என்னும் மிகப் பெரிய பாரத்தை மிகச் சிறிய வயதில் ஏற்று தன் பாட்டியையும் அன்னையையும் வழி நடத்தும் பிரயாணத்தை மன வருத்தத்துடன் தொடங்குகின்றான்.

நானும் என் கணவரும் இன்று வரை அந்த பேரிடியிலிருந்து மீளவில்லை. அந்த வெள்ளியன்று இருவரும் இரவு தூக்கத்தை இழந்து வருத்தத்தில் பரித வித்தோம்

நண்பர்களே, நம் எதிரிகளுக்கு கூட இந்த கதி வரக் கூடாது என்பதுதான் என் கருத்து.

இந்த உண்மைக் கதையை உங்களுக்கு தெரிந்த யாவருடனும் பகிர்ந்து மற்றுமொரு இழப்பைத் தவிருங்கள். நன்றி.




>>>> மீண்டும் முதல் பக்கம் செல்ல

# பேசும் படங்கள் :: kayjees

அடடே... செடிகளுக்கெல்லாம் சக்கரம் வைத்து நகர்த்த முடியுமா?



அந்த ஒலிபெருக்கிகள்... அந்த மோனோ டேப்ரெக்கார்டர்... அந்தக் காலமும் நெஞ்சிலாடுதே...



தொடர்ந்து நடக்க முடியாதுப்பா.... கொஞ்சம் ரெஸ்ட்டு...!



விவசாயம் செய்கிறோமோ இல்லையோ...



ஜாலியா ஒரு ரைட் போயிட்டு வரேன்!



குட்டி ஹாஜின்னு பெயர் இருந்தாலும் பெரிய ஆள்தாங்க அவரு...




**( See the cars in our next issue)**

**உங்களைப்பற்றி நீங்கள் ...**

**வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.**

**வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை**
**engalblog@gmail.com**
**என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.**

**வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.**
**எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.**

**எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.**

**இந்த மின்நிலா இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை,**
**engalblog@gmail.com**
**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் !**


K G G